## களம் காணும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 2-ஆம் கட்ட தேர்தல் பிரச்சாரம்!

## விருதுநகர் – திருமங்கலத்தில் இன்று உரையாற்றுகிறார்!

**தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரித்து வருகிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், இரண்டாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 3ஆம் தேதி திருநெல்வேலியில் தொடங்கினார்.**

**இன்று காலை விருதுநகரிலும், மாலையில் திருமங்கலத்திலும் நடைபெறும் மாபெரும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கழகத் தலைவர் அவர்கள் உரையாற்றுகிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

**05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | விருதுநகர் (பொதுக்கூட்டம்) | சாத்தூர், ராஜபாளையம், சிவகாசி, திருவில்லிபுத்தூர், திருச்சுழி, அருப்புக்கோட்டை, விருதுநகர் |
| மாலை 5 மணி | திருமங்கலம் (பொதுக்கூட்டம்) | மேலூர், மதுரை கிழக்கு, சோழவந்தான், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மத்தி, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், திருமங்கலம், உசிலம்பட்டி |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18

## திருச்சி - லால்குடியில் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

### அமைச்சர் கே.என். நேரு தலைமையில் நடைபெற்றது!

திருச்சி, ஏப்.5-

திருச்சி லால்குடி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் பாரி வள்ளலை ஆதரித்து கழக முதன்மைச் செய லாளர் கே.என். நேரு வாக்கு சேகரித்தார்.

தி.மு.க முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் செயல்வீரர்கள் கூட்டம் லால்குடி பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தேர்தல் பணிகள் குறித்து கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்,

குறிப்பாக உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் பாரி வள்ளலின் வெற்றிக்காக அனைவரும் ஒற்றுமையுடன் களப்பணியாற்ற வேண்டும் என வலியுறுத்தினார்.

வாக்கு சேகரிப்பின் போது நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஒவ்வொரு வீடாகச் சென்று மக்களை நேரடியாகச் சந்தித்து வாக்கு சேகரிக்க வேண்டும். தேர்தல் நேரத்தில் மிகவும் விழிப்புடன் செயல்பட வேண்டும். அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்,

கழகத்தின் கோட்டையாக விளங்கும் லால்குடியில், பாரி வள்ளல் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சிக்கு முன்னதாக தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.க தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் காணொளி காட்சி வாயிலாக ஆலோசனைகளை வழங்கினார்..

இந்த நிகழ்வில் மத்திய மாவட்டச் செயலாளர்கள் வைரமணி, பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகள், கூட்டணி கட்சியின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.



திருச்சி (தெற்கு) மாவட்டத்திற்கு உட்பட்ட திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி கிழக்கு தொகுதி வேட்பாளர் முனைவர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் தில்லை நகரில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பொதுச்செயலாளர் வி. கோவிந்தராஜ்லுவைச் சந்தித்த வேட்பாளர்கள், நடைபெறவுள்ள தேர்தலில் உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு அளிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். இந்தச் சந்திப்பின் போது வணிகர்களின் கோரிக்கைகள் மற்றும் தொகுதி மேம்பாடு குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இந்நிகழ்வின் போது மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் மற்றும் வணிகர் சங்க பேரமைப்பின் நிர்வாகி ஸ்ரீதர் ஆகியோர் உடன் இருந்தனர் .



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் சிவ.வீ.மெய்யநாதன் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி உட்பட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்க நிர்வாகிகளை சந்தித்து ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் வெற்றிக்கான கருத்துக்களை எடுத்துரைத்து,’திராவிட மாடல்’ அரசின் சாதனை திட்டங்களை எடுத்துக்கூறியும்,ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசின் தமிழ்நாட்டிற்கும் தமிழ் மண்ணுக்கும் இழைக்கும் அநீதியை இல்லம் தோறும் சென்று பிரச்சாரப் பணியில் ஈடுபட்டு பெரு வாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். நிகழ்வில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் இராம.சுப்புராம் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியின் நிர்வாகிகள் உள்ளனர்.




தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.இந்த கூட்டத்தில் அரூர் தி.மு.க. வேட்பாளர் சண்முகம், தருமபுரி தே.மு.தி.க. வேட்பாளர் டாக்டர்.இளங்கோவன், தொகுதி பார்வையாளர்கள் செங்குட்டுவன், சத்திய மூர்த்தி, நகர செயலாளர்கள் நாட்டான்.மாது, எம்.பி.கௌதம் மற்றும் ஹரிவிக்னேஷ், உதயசூரியன், தமிழ், கூட்டணி கட்சி மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.